RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2012

# இடைக்கால புலவர்களான இராமச்சந்திர கவிராயர், ஔவையாரின் தனிப்பாடல்கள் மூலம் அவர்களின் வாழ்க்கைநிலை குறித்த ஆய்வு

## த. ஷீபா [அ, *], மா. கார்த்திகேயன் [அ, ஆ]

[அ] தமிழ் துறை, கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு, நாமக்கல் - 637215, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] கே.எஸ்.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு, நாமக்கல் - 637215, தமிழ்நாடு, இந்தியா.

# Study on medieval scholar's Ramachandra Kavirayar and Avvaiyar lifestyle through their occasional verse

## T. Sheeba [a, *], M. Karthikeyan [a, b]

[a] Department of Tamil, K.S. R College of Arts & Science (Autonomous), Tiruchengode, Namakkal- 637 215, Tamil Nadu, India.

[b] K.S.R College of Arts and Science for Women, Tiruchengode, Namakkal- 637 215, Tamil Nadu, India.

Corresponding Author:
sheebasrini2014@gmail.com

Received : 28-12-2019
Accepted : 23-01-2020

Check for updates

**ABSTRACT**

It is worth noting that occasional verse (Thani Padalgal) plays an important role in medieval literature. The Sangam scholars compiled songs. But they did not disappear in the middle Ages, and the composers were largely absent. So, we have lost lot of them. Again, in the middle Ages, scholars composed many books separately and they are all unique. This is because they are meant to clarify their personal instincts and dislikes in their lives. The each occasional verse has a wide variety of themes and genres and they were composed by many scholars. Among them Ramachandra Kavirayar and Avvaiyar are notable personalities. In this article, we will discuss the life of Ramachandra Kavirayar and Avvaiyar through their occasional verse.

**Keywords:** Medieval scholars, Occasional verse, Sangam scholars



## ஆசிரியர்கள் பற்றி

**திருமதி த. ஷீபா**, எம்.ஏ, எம்.எட். அவர்கள் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக கல்வி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் தனது முதுகலை படிப்பை சென்னை பல்கலையில் முடித்து, தற்போது கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ் துறையில் முழுநேர ஆய்வாளராக தனது முனைவர்

பட்டத்தினை மேற்கொள்கிறார். இவர் ஐந்திற்கும் மேற்பட்ட பன்னாட்டு கருத்தரங்கங்களில் தனது ஆய்வு கட்டுரைகளை சமர்பித்துள்ளார். தற்பொழுது முனைவர் பட்டம் முடிக்கும் தருவாயில் உள்ளார். இவர் இடைகால இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர்.



**முனைவர். மா. கார்த்திகேயன்** பி.எச்டி, அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனத்தில் தமிழ் துறை பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் தற்போது கே.எஸ்.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வராகவும் பணிபுரிந்து வருகிறார். இவரிடம் இதுவரை ஐந்து பேர் முனைவர் பட்ட ஆய்வு படிப்பை முடித்து உள்ளனர். மேலும் பலருக்கு ஆய்வு நெறியாளராக இருக்கிறார். ஏராளமான கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி உள்ளார். இவர் பல கருத்தரங்கங்களை சீரும் சிறப்புமாக நடத்தி இருக்கிறார். இவருடைய கல்வி பணிக்காக பல விருதகளை பெற்றுள்ளார்.

## சுருக்கவுரை

இடைக்கால இலக்கியத்தில் தனிப்பாடல்கள் முக்கியபங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடதக்கதாகும். சங்கக்காலப் புலவர்கள் பாடல்களைத் தொகுத்து வைத்தார்கள். ஆனால் இடைக்காலத்தில் அவை மறைந்துப் போகாமல் தொகுத்தவர்கள் பெரும்பாண்மையாகக் காணப்படவில்லை. அதனால் எண்ணற்ற தனிப்பாடல்கள் நாம் இழந்து விட்டோம். பிறகு இடைக்காலத்தில் புலவர்கள் பல நூல்களை தனித்தனியாகப் இயற்றினார்கள். அவை அனைத்தும் தனிச்சுவை வாய்ந்தது. ஏனெனில் அவர்களின் தனிப்பட்ட உள்ளப் போக்கினையும், அவர்களின் வாழ்க்கையில் சந்தித்த விருப்பு வெறுப்புகளையும் தெளிவுபடுத்தும் வகையில் அவைகள் அமைந்துள்ளது. தனிப்பாடல்கள் ஒவ்வொன்றும் பல்வேறு கருத்துவளமும், கற்பனைச்செறிவும் மிகுந்து காணப்படும். இத்தகைய தனிப்பாடல்களை புகழ் பெற்ற புலவர்கள் பலர் இயற்றினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இராமச்சந்திர கவிராயரும் ஔவையாரும் ஆவார். இந்த ஆய்வுக்கட்டுரையில் இராமச்சந்திர கவிராயர் மற்றும் ஔவையாரின் தனிப்பாடல்கள் மூலமாக அவரது வாழ்க்கை நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி காண்போம்.

## இராமச்சந்திரகவிராயாரின் வாழ்வுநிலை

இராமச்சந்திர கவிராயர் சென்னையில் வாழ்ந்த புகழ் பெற்ற கவிச்சக்ரவர்த்தி ஆவார். இவர் தனிப்பாடல்கள் எழுதுவதில் சிறப்பு மிக்கவர். மேலும் எளிய சொற்களில் நகைச்சுவையாக கவிப்பாடும் ஆற்றல் மிக்கவர். அதுமட்டும் மின்றி சித்திரக்கவிகள் பாடுவதிலும், தேர்ந்த நாடக ஆசிரியருமாவார். கவிராயர் இராசுமரபினர் என்னும் சைவசமயத்தை சேர்ந்தவர் என்று குறிபிடப்பட்டுள்ளது. இவர் பாடிய தனிப்பாடல்கள் சிலவற்றையும் அவற்றின் மெய்பொருளையும் இக்கட்டுரையில் சுருக்கமாக

காணவிருக்கிறோம். அவ்வாறு காண்பதன் மூலம் இராமச்சந்திர கவிராயாரின் கவித்திறன் பற்றி அறியமுடிகிறது. அதுமட்டும்மின்றி இராமச்சந்திர கவிராயாரின் வாழ்வுநிலை எவ்வாறு உள்ளது என்பதை அவருடைய சில தனிப்பாடல்கள் மூலம் காண்போம் (Subramaniya Pillai, 2008; Tamilpriyan, 2013).

துன்பத்தையும் நகைச்சுவையுடன் சொல்வதில் வல்லவர் கவிராயர். சிற்றிலக்கியம் மற்றும் தனிப்பாடல்கள் நன்கு வளர்ச்சி பெற்று வந்த இடைகாலத்தில் இலக்கியப்படைப்பாளர்களை ஆதரிக்கவும் பரிசுகள் வழங்கவும் பண்டையக் காலம் போல வள்ளல்கள் இல்லாதக் காரணத்தால் புலவர்கள் வறுமையில் வாடி வதங்கினர். புலவர்கள் தாம் கற்ற கல்வியையே வறுமையால் வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். சிலநேரம் வயிற்று பிழைப்பிற்காக ஜமீன்களையும், மடங்களையும் சார்ந்து வாழும் சூழ்நிலை உருவானது. இந்த சூழ்நிலை இராமச்சந்திர கவிராயரையும் விட்டுவைக்கவில்லை. சிலகாலம் இத்தகைய வாழ்க்கை சூழ்நிலைக்கு ஆளாகிவிட்டார். இவர் புகழை விரும்பாது எளிமையான அந்தணர் வாழ்க்கையை இறைபக்தியுடன் வாழ்ந்து வந்தார். இக்கால புலவர்கள் பலர் வயிற்று பிழைப்பிற்காக சிறு சிறு குறுநிலமன்னர்களை அண்டி வாழ்ந்து பிரபந்தகள் பலவற்றைப் படைத்தனர். ஆனால் கவிராயாரின் மனம் இத்தகுச் செயலைச் செய்ய ஈடுபடவில்லை. பிற புலவர்களின் இன்நிலையைக் கண்ட இராமச்சந்திரர் மனம் வெகுண்டு தன் பாடல்வரிகள் மூலம் இறைவனிடம் தம் உள்ளத்தின் உணர்வை வெளிப்படுத்தி புலம்பும் வகையில் பல தனிப்பாடல்கள்களை இயற்றினார். மேலும் இவர் சிவபெருமானையும், முருகபெருமனையும் நினைத்து நெஞ்சுருகி பல பாடல்களையும், மழை பொழிதல், பசு ஈனுதல், இறப்பு, கடன், பாம்பு தீண்டல், குருக்கள் தட்சணை, அடிமை, மணைவி, உடல்நலமின்மை, இயற்கை, என துன்பங்கள் தொடர்ந்து ஒருவனுக்கு வந்தால் என்ன செய்வான் பாவம் என்று என்னி இறைவனிடம் மன்றாடி பல பாடல்களை படியுள்ளார். ஆம். படைப்புகள் பேசபடுகின்ற அளவிற்கு படைப்பாளிகளின் வழக்கை நிலை இருப்பதில்லை என்பது இவரின் பாடல்வரிகள் தெளிவுப்படுத்துகிறது (Arunachalam and Raja Varatharaja, 2012; Subramaniyan,, 2014; Kanthasamy, 2004). ஏழ்மைலும் நேர்மை என்ற வாக்கின்படி வேறு யவர் புகழும் பாடாது இறைபுகழ் மட்டுமே பாடினார். இவர் பாடிய தனிப்பாடல்கள் சிலவற்றையும் அவற்றின் மெய்பொருளையும் இங்கு காண்போம் . அவ்வாறு காண்பதன் மூலம் இராமச்சந்திர கவிராயாரின் வாழ்வு நிலையும் புலப்படும்.

**கல்லைத்தான் மண்ணைத்தான் கச்சிதான்**
**குடிக்கத்தான் கற்பித் தானா?**
**இல்லைத்தான் பொன்னைதான் எனக்குத்தான்**
**கொடுக்கத்தான் இரட்சித் தானா?**
**அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்**
**நோவத்தான் ஐயோ எங்கும்**
**பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்**
**புவியில்தான் பண்ணி னானே.**

இதன் பொருள் என்னவென்றால் கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்க இறைவன் சொல்லித் தரவில்லையே, பொன்பொருள் கொடுத்து என்னைக் காக்கவும் இல்லையே! இதற்காக யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்? எங்கும், எலாரிடமும் பல்லைக்காட்டிப் பிழைக்குமாறு இறைவன் என்னைப் படைத்துவிட்டானே! என்று புலம்பித் தவிக்கும் நிலை தெள்ளத் தெளிவாகிறது.

மீண்டும் அவரது மற்றறொரு புலம்பல் என்வென்றால் ஈயாதவர் இகழ்ச்சி

**வணகம்வரும் சிலநேரம் குமர கண்ட**
**வலிப்புவரும் சிலநேரம் வலியச் செய்யக்**
**கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்**
**கடிக்கவரும் சிலநேரம் கயவர்க் கெல்லாம்**
**இணக்கம்வரும் படிதமிழைப் பாடிப்பாடி**
**எத்தனைநாள் திரிந்துதிரிந்து உழல்வேன் ஐயா !**
**குணக்கடலே அருட்கடலே அரசுரான**
**குறைகடலை வென்றபரங் குன்று ளானே !**

இந்தப் பாடலின் பொருள் என்னவென்றால் பாட்டுப் பாடிப் பரிசு வாங்கப் பணம்படைத்தவர்களைப் பார்க்கப் போகும்போது, சில நேரம் அவர்கள் வணக்கம் சொல்லி வரவேற்கிறார்கள். சிலநேரம் என்னை கண்டதும் அவர்களுக்குக் குமரகண்ட வலிப்பு வருகிறது. முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள். சில நேரம், என்னை ஏறிட்டும் பார்க்காமல் வேண்டுமென்றே கணக்குப் புத்தகத்தைப் புரட்டுகிறார்கள். சிலநேரம் நாய்களைப்போலக் கடிக்க வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் தமிழைப் பாடிப்பாடி பரிசு வாங்க இன்னும் எத்தனை நாள், நான் திரிந்து அலைவேன்? ஒலிக்கும் கடலாக இருந்து அரக்கர்களை வென்றவனே! திருப்பரங் குன்றத்தில் விளங்கும் முருகா! கூறு என்று தன்நிலைக் குறித்து இறைவனிடம் புலம்புகிறதைப் பார்க்கும்போது இராமச்சந்திர கவிராயாரின் வாழவு நிலை எவ்வாறு இருந்து இருக்கும் என்பது தெளிவாகிறது. இவர் தமது பாடல் ஒன்றில் புல்லுக் கட்டு, நெல்லுக் கட்டு, பணக்கட்டு, சொல்லுக்கட்டு, மல்லுக்கட்டு என்று சொற்களை அடுக்குச் சொல்வது இவரது தமிழ் நடைக்கு ஓர் சிறந்த எடுத்துகாட்டாகும். இத்தனை கட்டுகளின் விளக்கம் இன்னவென்றால்

“புல்லுக்கட்டும் பணக்கட்டும் கண்டபின்னர் நீலக்கல்லில் கடுக்கனும் போடுவார் சொல்லுக்கட்டும் புலவரைக்கண்டக் கற்றுறிப்பாய்ந்து கதவை அடைத்து மல்லுக்கட்டும் மடையரைப் பாடவோ! மலைச் சாரலில் வாழ் பெரியம்மையே! பொல்லாத ஒருவனை நான் நல்லான் என்றும் கல்லாத ஒருவனை நான் காற்றால் என்றேனே! காடெறியும் அவனை நாடாள்வாய் என்றேன்! சூப்பற்றோளை வழங்காதக்கையனை நான் வள்ளல் என்றேனே! இல்லாது சொனோனுக்கில்லை என்றான் யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே.. என்று மனம் வருந்தி பார்வதி தேவியிடம் புலம்பி வேண்டுகிறார்.

மற்றொரு பாடலின் மூலம்புலவர்ககளின் மனநிலையை இங்கனம் விளக்குகிறார்.

**“இரவல நெயுனக் கில்லாத தென்ன விதயமென்ன**
**பரவுண வேது சுவையற்ற தென்னசொற் பான்மையென்ன**
**தரவுரை செய்திடவென்று னதற்கொன்றுஞ் சற்றிலன்யான்**
**வரதிரு வேங்கட நாதாவென் றேன்பொன் வழங்கினனே.”**

இப்பாடலின் பொருள் புரவலன் ஒருவன் பல வினாக்களை தொடர்ந்து வினவ, அதற்கு விடையளிக்கும் வகையில் இரவலன் சொல்லாமல் "திருவேங்கட நாதா" என்று இறைவனின் பெயரைச் சொன்னான். அத்தொடரே புரவலன் வினவிய வினாக்களுக்கு விடையாக இருந்ததால் மகிழ்ந்து பொன்னை அள்ளித் தந்தான் என்பது பாடலின் கருத்து. திருவேங்கட நாதா என்றதும் வறுமை நீங்கி செல்வம் செழித்தது என்று இங்கு திருவேங்கடனின் சிறப்பை பாடி அவர் பெருமான் மீது தாம் கொண்ட பக்திநிலையை விளக்கியுள்ளார்.

கவிராயாரின் வாழ்க்கையிலும் வறுமை கோரத்தாண்டவம் ஆடிய காலங்களும் உண்டு. அந்த காலகட்டத்தில்தான் “என் குற்றம்” என்ற பாடலில் தன் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை அருமையாக விளக்கியுள்ளார். அப்பாடலின் மூலம் புலவரின் மனவருந்தம் இங்கு காண்போம்.

**என் குற்றம்** !
**கல்லாத வொருவனைநான் கற்று யென்றேன்**
**காடெறியு மறவனை நாடாள்வா யென்றேன்**
**பொல்லாத வொருவனைநா னல்லா யென்றேன்**
**போர்முகத்தை யரியானைப்புலியே றென்றேன்**
**மல்லாரும் புயனென்றேன் சூம்பற் றெளை**
**வழங்காத கையனைநான் வளன் லென்றேன்**
**இல்லாது சொன்னேனுக்கில்லை யென்றேன்**
**யானுமென்தன் குற்றத்தா லேகின்றேனே.**

நான் கல்லாத ஒரு செல்வனை நோக்கி “கற்றவனே” என்றேன், காட்டினை வெட்டும் குலத்தில் தோன்றிய செல்வனை “நாட்டை ஆள்பவனே” என்றேன், தீய குணம் பெற்றவனை “நல்லவனே” என்றேன், போர்க்களத்தை அறியாத ஒருவனை “நீ போர் செய்வதில் புலி போன்றவேன்” என்றேன், மெலிந்த தோள்களையுடையவனை “மல்போருக்கு ஏற்றவன்” என்றேன், பிறர்க்கு பொருளைக் கொடாத ஒருவனை “வள்ளல்” எனச் சொன்னேன், இவ்வாறு பொய்யாக இல்லாததை உரைத்ததற்காக எனக்குக் கொடுக்க தன்னிடம் பொருள் இல்லை என்றான். நானும் என் குற்றத்தை உணர்ந்து பொருள் பெறாமல் செல்கிறேன் என்று இங்கனும் புலவர் தம் உள்ளத்து உணர்வு மற்றும் மனக்குமுறலை பாடல் வரிகள் மூலமாக அருமையாக வெளிப்படுத்தியுள்ளார் என்பது புலவரின் வாழ்வுநிலைக்கு ஒரு சான்றாகும்.

அதுமட்டுமின்றி சங்கரரிடம் தன் அவலநிலையைக் குறித்து புலம்புகிறார். என்னவென்றால், வஞ்சகர்பால் நடந்தலைந்த காலில் புண்ணும், வாசல்தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும், செஞ்சொலை நினைத்து உருகும் நெஞ்சில் புண்ணுந் தீருமென்றே சனங்ரன்பாற் சேர்ந்தேன் அப்பா! கொஞ்சமல்ல, பிரம்படியுன் புண்ணும் வேடன் கொடுங்

காலால் உதைத்த புண்ணுங் கோபமாகப் பஞ்சவரில் ஒருவன் வல்லால் அடித்த புண்ணும், பாரென்றே காட்டி நின்றான் பரமன்றானே. இவ்வாறாக தன் நிலைகுறித்து இறைவனிடம் புலம்பிக்கொண்டே தன் வாழ்நாளைக் கழித்து இறையடிச் சேர்ந்தார்.

## ஔவையாரின்(இடைக்காலம்) வாழ்க்கை

ஔவையார் நாம் அனைவரும் நன்கு அறிந்த ஒரு பெண்புலவர். ஔவையார் என்ற பெயர் கொண்ட புலவர்கள் பலர் இருந்தனர். வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்தார்கள் என்பது தெரியவருகிறது. இங்கே நாம் அறியப்படும் ஔவையார் கம்பர் வாழ்ந்த காலத்தில்'(12ம் நூற்றாண்டு) தமிழகத்தில் வாழ்ந்தார் என்று தெரிகிறது. இவர் தந்தையார் பகவன் எனவும் தாய் ஆதி என்றும், ஔவையார் பாணரகத்தில் பிறந்தவர் என்றும் கூறப்படுகிறது. மற்ற புலவர்களின் காலகட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஔவை பிராட்டியார் காலத்தை வென்று வாழ்ந்தவர் என்பது புலப்படுகிறது. ஔவை என்றபெயர் அவ்வா என்ற சொல்லின் திரிபாகும். அதன் பொருள் மூதாட்டி அல்ல "தவபெண்" என்பதேயாகும். இடைக்காலத்தில் ஔவை என்ற சொல் வயது அல்ல அறிவாற்றலால் முதிர்ச்சி பெற்றவர்கள் என்பது பொருள். இதன் மூலம் ஔவை பெரும் சிறப்பு வாய்ந்த தமிழ்ப்புலவர் என்பது தெளிவாகிறது. மனித வாழ்வில் எதிர்கொள்ளும் இழிநிலைகளை கடந்து சிறப்புற வாழ மகத்தான தத்துவங்களை தன்பாடல் வரிகளால் வாரிவழங்கியவர் நம் ஔவையார். இவர் பிறப்பிலேயே தமிழறிவுடன் பிறந்தவர்.

சிவபரத்துவம் தெரிந்தவர் பெற்றோரிடம் வளராது பாணரகத்தில் வளர்ந்து சிவப்பெருமானிடம் தீரா பக்தி கொண்டு தொண்டுள்ளத்துடன் வாழ்ந்துவந்தார். அறம், பொருள், இன்பம், வீடு, எனும் நான்கும் புரிந்தவர். தமிழ்நாடு முழுவதும் திரிந்தவர். சிறியோராயினும், வரியோராயினும் தமக்கு பரிசு ஈந்தவரை பெரியோராக மதித்து பாடியவர். பரிசு கொடுத்தலிலும் பாட்டுக் கேட்டலிலும் பாராமுகம் காட்டியவரை, பாடலருமை அறியா மூடரையும் வெறுத்துப் பாடியவர். இவர் பாடிய பாடல்கள் சிலவற்றின் மூலம் ஔவையாரின் வாழ்வு நிலைக் குறித்து காண்போம்.

ஔவை கையிலிருந்த மூட்டையை என்னவென்று சோழன் கேட்டதற்குப் பாடியது.

**கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்**
**மூழக் குழக்குத் தினைதந்தாள்-சோழாகேள்**
**உப்புக்கும் பாடிப் புளிக்கும் மொருகவிதை**
**ஒப்பிக்கு மென்ற னுளம்.**

இதன் பொருள் சோழமன்னனே கேட்பாயாக! குறப்பெண்ணினுடைய வெட்டுப்பட்ட சிறு பலா மரமானது தளிர்த்து ஓங்கும்படி நான் பாடியதற்காக, குறமகள் ஒருபடி தினை எனக்கு அளித்தாள். என் மனமானது, மகிழ்ந்து உப்புக்காகவும் கவி சொல்லி, புளிக்கும் ஒரு பாட்டுப் பாடிக்கொடுக்கும் என்றார். அப்படி என்றால் தன் வயிற்று பிழைப்புக்கு கவிபாடி

யுள்ளார் என்பது தெரியவருகிறது. ஔவையார் துறவுப் பூண்டு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார். யாசகம் பெறச்செல்லும் இடத்தில் அன்பில்லாள் இட்ட அமுது பற்றித் தமதுப்பாடலில் விருப்பமில்லாதவள் அளித்த சோற்றை, காணக் கண் கூசுதே காண்பதற்குக் கண்கள் நாணுகின்றன. கை எடுக்க நாணுதே என்று கூறியுள்ளார். இவ்வாறாக ஔவையார் தனது உள்ளகுமறல்களையும், தமது உணர்வுகளையும் பாடலாகப் பாடியுள்ளார். இந்த உலகம், உள்ளவர்களை மட்டுமே உயர்த்தி வைக்கிறது, இலாதவர்களை இகழ்ந்துரைகிறது, அது புலவர்களாக இருந்தாலும் சரி, சாதாரண மானுடராக இருந்தாலும் சரி, ஆடை, ஆபரணங்கள் அணிந்து பகட்டுடன் வரும் புலவர்களின் கவி விரைவில் அரங்கேறும். அவர்களை சிறந்த புலவர்கள் என்றும் இந்த உலகம் கொண்டாடும். இதே இல்லாத ஒரு ஏழ்மை நிலையில் இருக்கும் புலர்கள் நல்ல கவி பாடும் திறன் பெற்றவரக இருந்தாலும் அவர்களின் கவி அரங்கதிர்க்கு வருவதில்லை. மாறாக அந்தரத்தில் தொங்கிக்கொண்டுதான் இருக்கும். இதற்கு உதாரணம் கூறும்வகையில் (சோழ மன்னன் கம்பரின் பாட்டை வியந்தான்; அப்போது ஔவை பாடியது.)

**விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்:**
**விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்;-- அரையதனில்**
**பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; -- அவர்கவிதை**
**நஞ்சேனும் வேம்பேனும் நன்று.**

இதன் பொருள், பரிசைப் பெற நினைக்கும் கவிஞரைத் தந்திரக்கரர் இரண்டு பேர் புகழ்ந்து பேச வேண்டும்; விரல்கள் நிறைய மோதிரங்கள் அணிந்திருக்க வேண்டும்; அப்படியானால் அவருடைய கவிதை நஞ்சைப் போலக் கொடியதாக இருந்தாலும் நல்லது என ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறியுள்ளர் ஔவை. இந்த பாடல் வரிகள் மூலமாக இடைக்காலத்தில் புலவர்களிடையே போட்டிகளும், பொறாமைகளும் சிறுசிறு பூசல்களும் ஏற்பட்டுள்ளது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இவ்வாறாக ஔவையாரின் தனிப்பாடல்களைப் பற்றி பேசிக்கொண்டே இருந்தால் நமக்கு பல உண்மைகள் புலப்படும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. ஔவையார் தம் வாழ்க்கையை வறுமையோடும், தீராபக்தியோடும், பல பக்திப் பாடல்களைப் பாடி தெய்வப் புலவராகி முக்திப் பெற்றார் என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றை உற்றுநோக்கும் போதுத் தெரிகிறது.

## முடிவுரை

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் ஏற்படும் மாற்றம் மற்றும் ஏற்ற இறக்கத்திற்கும் அவர்களை சேர்ந்த சமுதாயம் மற்றும் சூழ்நிலை முக்கியபங்கு வகிக்கிறது. காலத்தின் சுழற்சியால் ஏற்படும் மாற்றத்திற்கு அனைத்து சமுதாயத்தினரும் ஒரு கட்டத்தில் அடிபணிந்தே தீரவேண்டும். இதற்கு இலக்கியங்களை படைக்கும் படைப்பாளிகள் (புலவர்கள்) மட்டும் விதிவிலக்கல்ல. இவ்வாறாகதான் இராமச்சந்திர கவிராயரும், ஔவையாரும் தமக்கு ஏற்பட்ட சோதனைகளளையும் தனது வாழ்வுநிலையும் பற்றி இடைக்கால

இலக்கியமாகிய தனது தனிப்பாடல்கள் மூலமாக எடுத்தியம்பியுள்ளனர் என்பதை இந்த கட்டுரையில் சுருக்கமாக கண்டோம்.

## References

[1] K. Subramaniya Pillai, Thani Padal Thiratu, 1,2, Santha Publishing, 2008.

[2] Tamilpriyan, History of Tamil scholars, Aruna Publishing, 2013.

[3] Dr.M. Arunachalam, Raja Varatharaja, History of Tamil Literature, Arun Publishing, 2012

[4] S.V. Subramaniyan, Thani Padal kalanchiyam, Meyyapan Publishing, 2014.

[5] S.N. Kanthasamy, History of World Tamil Literature, World Tamil Research Institute, 2004.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License